1989 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இல்லை.

விவசாயிகளின் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கோரி வரப்பெற்றுள்ள மனுக்கள்.

242—(* வினா எண். 6) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து கிணறுகளுக்கு மின் இணைப்பு கோரி 1980 டிசம்பர் முதல் 1988 டிசம்பர் முடிய வரப்பெற்றுள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) சுமார் 6,00,000 மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) அவற்றுள் 3,05,000 விவசாய விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களுடைய பதிலிலே கடந்த 8 ஆண்டுகளில் 3 லட்சத்து 5 ஆயிரம் விவசாய விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு தந்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இன்றையதினம் அனுமதி கிடைத்து, மோட்டார்கள் வாங்கி வைத்து 6 மாதங்களுக்கு மேலாக பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் என்னுடைய தொகுதியிலே இன்றைக்கும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்களே, அதை எல்லாம் கொடுத்ததாகக் கணக்கிட்டு சொல்கிறார்களா அல்லது கொடுக்காத 3 லட்சம் மனுக்களில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் இணைப்பு வழங்கப்பட்டதை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கூறப்படுகிறதே தவிர நோட்டீஸ் கொடுத்து மோட்டார்கள் வாங்கப்பட்டு வைத்ததை எல்லாம் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் செலவிட்டு அப்படி மோட்டார் வாங்கி வைத்து இன்றைக்கு பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு உடனடியாகக் கொடுப்பதற்கு உத்திரவிடப்படுமா? அதோடு மைய மின் துறை இன்றைக்கு இருந்துகொண்டிருக் கிறது. அதனிடத்திலே நம்முடைய மின் நெருக்கடியைப் போக்குவதற்கு நம்முடைய அரசு ஏதாவது உதவி கோரியதா? அவர்கள் என்ன பதில் சொல்லி இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் அதுபோல ஏற்கெனவே நோட்டீஸ் கொடுக்கப்பட்ட அத்தனை விவசாயிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற மின் பற்றாக் குறைக்கு—அண்டை மாநிலங்களிலும், பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால்— அவர்களால் நமக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. தேசிய கிரிட் என்பதிலே ராமகுண்டத்தில் மட்டும் தான் தமிழ்நாடு பங்கு பெற்று இருக்கின்றது. மற்ற இடங்களில் இருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே நீண்ட நெடும் தூரம் லைன் போடவேண்டி இருப்பதால், அதற்காக ஏற்படும் செலவில் மின் உற்பத்தியே செய்துவிடலாம் என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டிற்கு ராமகுண்டத்தில் மட்டும் தான் நேஷனல் கிரிட்டில் பங்கு இருக்கின்றது. அதிலிருந்துதான் நமக்கு மின்சாரம் கிடைக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது 6 லட்சம் பேர் மனுச் செய்ததில் 3 லட்சத்து 5 ஆயிரம் பேருக்கு மின் இணைப்பு கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் 3 லட்சம் பேர் மின் இணைப்பிற்காக காத்து இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு ஜெனரேட்டர் வைத்தோ அல்லது மற்ற வகையிலோ விவசாயத்தைச் செய்ய முடியாது. மின் இணைப்பு இல்லை என்று சொன்னால் அவர்கள் கிணற்றுப் பாசனமே செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுமே. மின் இணைப்பு, மனுச் செய்தவர்களில் பாக்கி இருப்பவர்களுக்கு கொடுப்பதோடு மட்டு மல்லாமல் இன்றைக்கு பல இடங்களிலே சென்ற காலத்திலுள்ள அரசு, மின் பாக்கிகளுக்காக அபராத வட்டி என்று சொல்லி

1989 மே 11]

4 மடங்காக தொகையை உயர்த்தி நோட்டீஸ் அனுப்பி இருந்தார்கள். இப்போது வந்து இருக்கிற நம்முடைய அரசு அதைத் தள்ளுபடி செய்து அசலை மட்டும் கட்டினால் போதும் என்று சொல்லியும் கூட பல இடங்களிலே மின் இணைப்பைத் துண்டித்து இருக்கிறார்கள், அந்தத் துண்டிப்புகளுக்கு மீண்டும் இணைப்புக் கொடுப்பதற்கும், அந்தப் பழைய பாக்கியில் அசலை மட்டும் வசூல் செய்து கொண்டு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் 40,000 விவசாய மின் இணைப்பு வழங்கப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டு, வழங்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஏற்கெனவே பணம் கட்டாமல் இருக்கின்ற விவசாயிகளுக்கு மின் துண்டிப்பைப் பற்றி இங்கே உறுப்பினரவர்கள் கேட்டார்கள். கழக அரசு—முதல்வர் கலைஞர் அவர்கள்—அதற்குண்டான வட்டியைப் பூராவும் தள்ளுபடி செய்து, அசலை மட்டும் தவணை முறையில் கட்டினால் அவர்களுக்கு மின் இணைப்பு தரப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகும் பல காரணங்களாலே, மழையில்லாத காரணங்களால் மின் துண்டிப்பு செய்யப்பட்டு, பணம் கட்டாமல் இருந்து மின் துண்டிப்பு செய்யப்பட்டதையெல்லாம் முதல்வரவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. அரசால் விரைவில் பரிசீலனை செய்யப்பட்டு, அனைவருக்கும் மின்னிணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மனுச் செய்து கிட்டத்தட்ட நான்காண்டுக் காலம், ஐந்தாண்டுக் காலம் கழித்துத்தான் இப்படி மின் இணைப்பு தருவதற்கான உத்தரவு வருகிறது. அதுவும் ஒரு மாத காலத்திற்குள் மோட்டார் பம்பு செட்டு வாங்கி வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது குறித்து முன்னறிவிப்பு தரப்படுமா? அல்லது காலம் நீட்டித்துக் கேட்டு மனுச் செய்தால் அதை அரசு ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் சென்ற முறை இடைத் தேர்தலில் நின்ற நேரத்தில் நான் ஏற்கெனவே மனுச் செய்த கிணற்றிற்கு ஒரு மாத காலத்திற்குள்ளாக நீங்கள் மோட்டார் வைக்க வேண்டுமென்று எனக்கு உத்தரவு வந்தது. காலம் நீட்டித்துக் கேட்டும் தரவில்லை. அப்படிக் காலம் நீட்டித்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு விவசாயிக்கும் 90 நாட்கள் முன்னாள் அறிவிக்கப்பட வேண்டும். உறுப்பினரவர்கள்

குறிப்பிட்டுச் சொன்னதை நான் கவனித்து, அதற்காக நீட்டிப்பு தருவதற்கு 30 நாட்கள் மட்டும் அவர்களுக்கு டைம் கொடுத்திருந்தால், நிச்சயமாக அவர்களுக்கு நீட்டிப்பு தரப்படும் என்பதையும், ஒவ்வொரு விவசாயிக்கும் 90 நாட்களுக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டு, அவர்கள் மோட்டார் வாங்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த 90 நாட்களில் வாங்க முடியாத விவசாயிகள் மனுச் செய்து கொண்டால் மேற்கொண்டு 30 நாட்கள் அவர்களுக்கு அவகாசம் தரப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும்பொழுது, இன்னும் மூன்று இலட்சங்களுக்கு மேல் விண்ணப்பங்கள் நிலுவையில் இருப்பதாக அறிவித்தார்கள். ஆகவே, நாம் பட்ஜெட்டிலே கொடுத்திருப்பது, 40,000 மின்னிணைப்பைத் தான் தர முடியும் என்று கொடுத்திருக்கின்றீர்கள். ஆக, இப்படிப் பார்த்தால், இன்னும் பத்தாண்டுகளுக்கு மேல் ஆனாலும்கூட, கொடுக்கின்ற நிலைமையை முழுமையாகப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து, இந்த மின்னிணைப்புக்கான செலவுகளை அந்த விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்வதாக இருந்தால் முன் வந்து மின்னிணைப்பு கொடுப்போமேயானால், நிச்சயமாக இந்த மூன்று இலட்சம் என்பதை கிட்டத்தட்ட ஒரு இலட்சம் என்ற அளவிலேகூட ஒரே வருஷத்தில் குறைப்பதற்குக்கூட வாய்ப்பு இருக்கும். ஆகவே, பின்னாலே சீனியாரிட்டி பிரகாரம் கொடுப்பதற்கான வாய்ப்புகூட இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர்கள் மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் கலந்து, கூடிய விரைவில், அதாவது சொந்த செலவிலே விவசாயிகள் பத்து பேர் சேர்ந்து, ஒரு இலட்சம் ரூபாய் ஆனாலும்கூட அவர்கள் செலவு செய்வதற்கு முன்வருவார்களேயானால் அதற்கு முன்னுரிமை கொடுத்து, சீனியாரிட்டியைத் தளர்த்தி மின்னிணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா? அது மட்டுமல்லாமல், இப்பொழுது தற்சமயத்திலே மின்னிணைப்பு 41,000 பம்பு செட்டுகளுக்கும், 40,000 குடிசைகளுக்கும் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியம், மன்றங்களிலே—இருக்கின்ற ஒரு வீதி விளக்குகள்கூட—பணம் கட்டி ஓராண்டு ஆகியும் ஒரு மின்னிணைப்புகூட கொடுப்பதற்கு, வீதி விளக்குகள் போடுவதற்கான. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நாம் சிணற்றிலே நிற்கிறோம், (சிரிப்பு)

1989 மே 11]

திரு. வி. கே. சின்னசாமி: மின் துறை அமைச்சர் என்ற காரணத்தால் கேட்கிறேன். ஆகவே, அந்த வீதி விளக்குகள் இன்னும் இரண்டு ஆண்டுக் காலம் ஆனாலும்கூட அதற்கென்று பட்ஜெட்டிலே எந்த நிதி ஒதுக்கமும் காட்டப்பெறவில்லை. ஆகவே, ஒரு வீதி விளக்குகூட போட முடியாத சூழ்நிலை, எரியச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அது குறித்தும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதுபோல ஒரு விவசாயிக்கு மின்னிணைப்பு தருவதற்கு சுமாராக ஒவ்வொரு இணைப்புக்கும் மின்சார வாரியத்திற்கு 25,000 ரூபாய் செலவாகின்ற காரணத்தால், இருக்கின்ற நிதிநிலைமையை அனுசரித்து, ஒரு வருடத்திற்கு 40,000 பேர்களுக்கு மின்னிணைப்பு வழங்கலாம் என்று இன்றைக்கு நிதி ஒதுக்கி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை முதல்வர் அவர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் வீதிகளிலே போடப்படும் மின்சார விளக்குகள்—அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று இங்கே தெரிவித்தார்கள்—குறித்து அரசு கவனித்து ஆவன செய்யும் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் ஏறத்தாழ இன்னும் மூன்று இலட்சம் மனுக்கள் தவணையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு 40,000 குறியீடுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 40,000 இணைப்பு கொடுக்கக்கூடிய குறியீட்டை அதிகப் படுத்தக்கூடிய உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? அப்படி அதிகப்படுத்தும்பொழுது, அந்த மின்னிணைப்புக்காகக் கடன் கொடுத்த—மோட்டார்கள் வாங்கி மின்னிணைப்பு கொடுப்ப தற்குக் காலதாமதம் ஆகக்கூடிய நேரத்தில், வழங்கப்பட்டிருக்கக் கூடிய அந்தக் கடனுக்கு விவசாயிகளிடமிருந்து வட்டி வசூலிப்பது நிறுத்தப்படுமா? இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் மோட்டார்களுக்குக் கொடுக்கக்கூடிய மின்சாரம் தினசரி இரண்டு மணிநேரம் கூட கிடைக்கவில்லை; அதை எட்டு மணி நேரமாவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வினாவைக் கேட்டால் அமைச்சர் விடை சொல்லலாம்.

[1989 மே 11

(முற்பகல் 9-30)

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, எட்டு மணி நேரம் தினசரி மின்சாரம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதற்கு 90 நாட்களுக்கு முன்பாகவே அவர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்பட்ட 90 நாட்களுக்குள் அவர்களுக்கு மின் இணைப்பு தரப்படுகிறது. ஏதாவது ஓரிரு இடத்தில் மோட்டார் வாங்கச் சொல்லி நோட்டீஸ் கொடுத்தும் மின் இணைப்பு தராமல் இருந்தால் அதைப்பற்றி பரிசீலித்து உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும். அதற்குண்டான வட்டியெல்லாம் தள்ளுவதற்கு அரசாங்கத்திடம் உத்தேசம் இல்லை. கடந்த 10 நாட்களுக்கு முன்பிருந்த நிலைமையை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகளிடமிருந்து தினமும் அவர்களைத் தொடர்பு கொண்டு பேசியதில் காலையில் நான்கு மணி நேரமும், இரவில் நான்கு மணி நேரமுமாக, ஆகமொத்தம் எட்டு மணி நேரம் மின்சாரம் இப்போது வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பாக அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து என். ஓ. சி. அதாவது ஆட்சேபணை இல்லாச் சான்றிதழ் சில இடங்களில் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். குறிப்பாக காஞ்சீபுரத்தை ஒட்டிய பகுதிகளிலும், செங்கல்பட்டை ஒட்டிய பாலாறு பகுதிகளிலும் இந்த ஆட்சேபணை இல்லாச் சான்றிதழ் பெற்றால்தான் மின் இணைப்புத் தரப்படும் என்று சொல்லப்படுகிறது. இது ஏன் வலியுறுத்தப்படுகிறது? இதை கைவிட்டு விட இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் தனிக் கேள்வியாக கேட்பார்களானால் விரிவான பதிலை அளிக்கிறேன்,

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிற விஷயங்களில் கிணற்றுப் பாசனத்தை மட்டும்

1989 மே 11]

நம்பி சாகுபடி செய்யக்கூடிய, வேறு எந்தவிதமான தண்ணீரும் இல்லாத பகுதிகளில், அதுவும் கிணற்றில் போதுமான அளவு தண்ணீர் இல்லாத பகுதிகளில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் சின்னசூரியூர், பெரியசூரியூர் பகுதிகளில் 1984-இல் மனுச் செய்தும் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னபோது 1983 வரையில் இந்த நடப்பாண்டிலும், அடுத்த நடப்பாண்டிலும் கொடுத்த பிறகுதான் இது கவனிக்கப்படும் என்ற முறையில் தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நடப்பாண்டில் 1984 முடிய நடவடிக்கை எடுக்கப்படுமா? அதுவும் அவர்கள் எல்லாம் ஜமீன்தார்கள் அல்ல, சாதாரண விவசாயிகள்தான். அவர்கள் பணம் கட்ட முடியாது. ஆகவே அரசுதான் செய்து தர வேண்டும். அந்த முறையில் அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் இருக்கிற நிதிநிலைமையை அனுசரித்து ஒரு வருடத்திற்கு 40,000 மின் இணைப்புகள் தான் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மின் இணைப்பு காலதாமதம் ஆவதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து, இதிலே எவ்வாறு செயல்படலாம் என்று கலந்தாலோசித்து விரைவில் அவர்களுக்கு எல்லாம் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு அதாவது ஏற்கெனவே ஒரு மின் இணைப்பு கூட இல்லாத விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்போல திட்டம் எதுவும் அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிற சில கிணறுகளில் வறட்சியின் காரணமாக தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. சில கிணறுகளில் போதிய அளவிற்கு தண்ணீர் இருந்தும்கூட முன்னுரிமை இல்லாத காரணத்தால் மின் இணைப்பு பெற முடியாமல் இருக்கிறது. ஆகவே, தண்ணீர் இருக்கிற இடங்களில் முன்னுரிமை கொடுத்து உடனடியாக மின் இணைப்பு செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தண்ணீர் இருக்கிற கிணறுகளுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசுக்கு இல்லை, படிப்படியாக 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து, வரிசையாக ஒவ்வொரு விவசாயிகளுக்கும் கொடுக்கப்படுமே தவிர, தண்ணீர் இருக்கிறது, எனக்கு கொடு என்றால் நிச்சயமாக கொடுக்கக் கூடிய எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வருடத்திற்கு 40 ஆயிரம் மின் இணைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டும், மோட்டார் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இலாக்கா மூலம் அறிவிக்கப்பட்டு வாங்கி வைத்திருந்தும்கூட, என்னுடைய தொகுதியான குடியாத்தம் தொகுதியில் பல விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக இணைப்பு வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் ஏற்கெனவே மின் வாரியத்திலிருந்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு இருந்தால், நிச்சயமாக அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, Change-over switch வைத்து air compresser மூலம் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக தனி மின் இணைப்பு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு இல்லை.

சென்னை துரித இரயில் திட்டம்.

243—(* வினா எண். 174) திரு. மு. இராமநாதன் : திரு. என். பழனிவேல், திரு. எஸ். டி. உகம்சந்த் திரு. பெ. சு. திருவேங்கடம், மற்றும் திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—